திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோவிலில் திரைப்படம் எடுக்க உரிமை வழங்கல்.

*வினா எண் 1007—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 முதல் 1979 முடிய எந்த எந்த நிறுவனங்களுக்குத் திரைப்படம் எடுப்பதற்கு உரிமம் கொடுக்கப் பட்டது?

(ஆ) மேற்படி உரிமம் கொடுக்கப்பட்டதின் பேரில் எவ்வளவு வருமானம் கிடைத்தது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு முடிய கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு திரைப்படம் எடுக்க உரிமம் கொடுக்கப்பட்டது:—

(1) திருவாளர் சுப்பு புரொடக்ஷன்ஸ், சென்னை-18.

(2) திருவாளர் வி. ஆர். சினி கிரியேஷன்ஸ், சென்னை-28.

(3) திருவாளர் குமாரசாமி அண்டு கோ, திருவனந்தபுரம்.

(4) திருவாளர் அருள்வேல் கம்பைன்ஸ், மதுரை.

(ஆ) அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு முடிய படப்பிடிப்பிற்காக பல நிறுவனங்களிடமிருந்து கட்டணமாக கிடைக்கப் பெற்ற வருமானம் ரூ. 2,250.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோயிலில் படம் பிடிப்பதற்காக அனுமதிக்கப்படும்போது, இன்னும் அதிகமாகக் கட்டணத்தை வசூல் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? பக்தி படங்களுக்கு மட்டுமே படப்பிடிப்பு கோயிலுக்குள் நடத்த அரசு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 மே 7]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஏற்கனவே அதிகமாக இருந்த கட்டணத்தை திரைப்படத் துறையினுடைய வளர்ச்சி கருதி இப்படிப்பட்ட முக்கியமான கலைச்சிற்பங்கள் மிக்க ஆலயங்கள், எழில் மிக்க இயற்கை வளமுள்ள காட்சிகள் திரைப் படங்கள் மூலம் எடுத்துப் பிரசாரம் ஆகவேண்டும் என்று கருதியும் திரைப்படத் துறைக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்ற எண்ணத் திலும் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. குறிப்பாக பக்திப் படங் களைத்தான் கோவில்களில் எடுக்கிறார்கள். அது தவிர வேறு படங்களுக்கு அவசியமானால் கோவில் காட்சிகள் வருகிற போது அந்தக் கோவில்களைப் பயன்படுத்துகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : திருச்செந்தூர் அருள்மிகு செந்தில் ஆண்டவர் முருகன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி விசாகம் நடக்கிறது. அதைச் செய்தித்துறை மூலம் படம் எடுத்து தமிழ்நாடு முழுவதும் போட்டுக் காட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சமய நிகழ்ச்சிகளை அல்லது அதுசம்பந்தப்பட்ட விழாக்களை தமிழ்நாடு அரசு மூலம் செய்திப் படம் எடுக்கிற கொள்கை கிடையாது. ஆகவே, அதை அறநிலையத்துறை விரும்பினால் அவர்கள் தனியாக எடுத்து அதை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. கோவைத்தம்பி : ஆண்டவன் சன்னிதானத்தை திரைப் படம் எடுக்க வசூலிக்கும் கட்டணங்கள் மூலம் தமிழ்நாட்டில் அதிகத் தொகை வசூலாகியிருப்பதாக அமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் கோவில்பற்றிக் குறிப்பிட்டுக் கூறியதிலிருந்து தெரிகிறது. ஆகவே, இன்று இந்தத் துறை மூலம் இதிலிருந்து கிடைக்கிற பணத்தை நடிகர்களாக இருந்து வறுமையில் வாடு கிறவர்களுக்குச் சலுகைகள் அளிக்கக்கூடிய வகையில் அல்லது அவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக இந்தப் பணத்தை அரசு அறநிலையத் துறையிலிருந்து பயன்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதிகமான வசூல் கிடைக்கவில்லை என்பதை இந்த ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 2,250 தான் கிடைத்திருக்கிறது என்ற புள்ளிவிவரமே கூறும். சில படங்களை சில குறிப்பிட்ட எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டுகூட சில கோவில்களில் போய் படம் எடுக் கிறார்கள். அந்தக் கோவில்களுக்குச் சென்று நம்பிக்கையோடு படம் எடுத்தால் அது நன்றாக ஓடும் என்ற நம்பிக்கையில் எடுக்கிறார்கள். அப்படிப் போகிற கோவில்களாக சில கோவில் களைத் தேர்ந்தெடுக்கிறார்கள், அதில் ஒன்றுதான் திருச்செந்தூர் கோவில்.

திரு. உ. சுப்பிரமணியன் : கோவில்களில் திரைப்படங்கள் எடுக்கும்போது மூலஸ்தானத்தில் படம் எடுக்க அனுமதிக்கப் படுகிறதா? அப்படி அந்த 'ஸாங்கடம் ஸாங்க்டோரம்' என்று சொல்லக்கூடிய அந்த வழிபாடு செய்கிற ஸ்தலத்தின் புனிதத் தன்மை குறையாமல் இருக்க அது தடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : ஆலயங்களில் திரைப் படங்கள் எடுக்கிறபோது சில கண்டிப்பான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

கோவில் உட்பிரகாரத்திலோ அல்லது கர்ப்பகிரகத்திற்குள் இருக்குமிடம், மூலவர் மற்றும் உத்ஸவர் விக்ரகங்களை பட மெடுத்தல் கூடாது.

கோவிலில் உட்பிரகாரத்திற்குள் நடைபெறும் சடங்குகள், மடாதிபதிகள் தியானங்கள் மற்றும் வழிபாடுகள் இவற்றினை யும் படம் பிடித்தல் கூடாது.

கோவில்களில் தெய்வீக வழிபாடு மற்றும் கோட்பாடுகள் இவற்றிற்குத் தகுந்த மரியாதை கொடுக்கப்பட வேண்டும். இந்துக்கள் அல்லாதவர்கள் கோவில் உட்பிரகாரத்திற்குள் பிர வேசிக்கக் கூடாது என்ற கண்டிப்பான நிபந்தனைகள் மீதுதான் அனுமதி அளிக்கப்படுகிறது.

தர்மபுரி நகரிலுள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி

*வினா எண் 1009—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தர்மபுரி நகரில் குமாரசுவாமி பேட்டையில் உள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் இராஜ கோபுரம், பின்கோபுரம் ஆகியவைகளை ஆலய நிதியினைக் கொண்டு திருப்பணி செய்ய ரூ. 45,000-க்கு இந்து சமய அற நிலையத்துறை ஆணையரின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளிட்ட குறிப்பில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு அதே தொகைக்கு மதிப்பீடு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளைய குறிப்பில் அங்கீகரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.